DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No. 183/2017 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 2 |
| Name | : பஞ்சவர்ணம். |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.08.2024.

\- - - - - - -

1வது எதிரி ஆஜரில்லை. மனுத் தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. 2 ம் எதிரி இறந்துவிட்டார். 3 ம் எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் கோட்டைப்பட்டியில் குடியிருந்துவருகிறேன். பாண்டிச்செல்வி என் மகள். காத்தம்மாள் என் சம்பந்தி. ஜோதிலிங்கம் என் மருமகன். கூடலிங்கம் சம்பந்தி ஆவார்கள். சுமார் 10 வருடங்களுக்கு என் மகளுக்கும், ஜோதிலிங்கத்திற்கும் திருமணம் நடந்தது. என் மகள் கணவர் வீட்டில் வசித்து வந்தார். குழந்தை பிறந்த பின்பு வயிற்று வலி என்று என் மகள் சொன்னதால், என் மகளைப் பார்க்க அவரின் வீட்டிற்குப் போனேன். அப்போது எனது மருமகன் மற்றும் என் சம்பந்ததிகள் 2 பேரும் அசிங்கமான

வார்த்தைகளால் பேசி ஏன் இங்கு வந்தாய் என்று திட்டினார்கள். அதன்பின்னர், நீ வந்ததால்தான் சண்டை என்று சொல்லி என் சம்பந்தகாரர் உருட்டுக் கட்டையால் தலையில் அடித்தார். என் மருமகன் சேலையை பிடித்து இழுத்தார். எனது சம்பந்தகாரி என் முடியைப் பிடித்து இழுத்தார். அப்போது என் மகளுக்கு சம்பந்தகாரர் அடித்தால் தலையில் காயம்பட்டது. பின்னர் ஆட்கள் வரவே நாங்கள் காவல் நிலையத்தில் புகார் செய்தோம். பின்னர் உசிலம்பட்டி, அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பிவிட்டார்கள். எனக்கு தலையில் 9 மூட்டுப் போட்டார்கள். நான் 1 வாரம் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். போலிசார் என்னை காவல் நிலையத்தில் விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை -</u>

போலிசார் விசாரணையின்போது, தற்போது சாட்சியமளித்துபோல்தான் சொன்னேன் என்றால்சரிதான். மருத்துவரிடம் காயத்தைப் காண்பித்தேன் என்றால் சரிதான், மூட்டுப் போட்டார்கள். தையல் போட்ட விவரத்தை போலிசாரிடம் சொன்னேனா என்றால் இல்லை. புகார் கொடுத்த அன்று விசாரித்ததை தவிர வேறு நாட்களில் போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என் மகளுக்கு வேறு திருமணம் நடந்தது குழந்தைகள் உள்ளது என்றால் சரிதான். என் மகளுக்கு என் மருமகன் சேர்ந்து வாழ இஷ்டமில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. எங்கோ ஏற்பட்ட காயத்தை வைத்து என் மருமகன் மற்றும்என் சம்பந்தகார் மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல எதிரி/கள் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2024.08.08 17:15:21 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**உசிலம்பட்டி.**